முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1349

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

09.06.2023, வெள்ளிக்கிழமை

1. அறம் வேலிகொண்ட அண்ணலே
   அருளாக இறங்கும் வள்ளலே
   வரம் தந்து உலகை மீட்க
   வல்லமைபட தர்மம் புரியும் அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி

(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 26 ம் நாள், 09.06.2023, வெள்ளிக்கிழமை)

   வரங்கள் கூட்டி அரங்கன் உன்னுள்ளே
   வடிவேலன் யான் அனுதினமும் அற்புதம் நடத்திவர
3. வருகவே அரங்கனுக்கு வல்லமைபட
   தொண்டர் படை பெருக்கம் உலகமெல்லாம் நிரம்பி வர
   வருகவே அரங்கன் தொண்டர்களே
   வையகத்தை காக்கும் மாற்றும் மகா சக்தி பெற்று சிறக்க நேரும்
4. நேர்மைகொண்ட தர்மவான்கள் ஞானவான்கள்
   நீதிநிலைநாட்ட வருகின்ற உயர்மக்களும்
   அரங்கன் திருவடி பற்றி சரணாகதி கொண்டு
   ஆறுமுகன் என் வழிபாட்டை துணிவோடு செய்துவர
5. வருகவே வையகம் ஞானலோகமாக
   வளர்ச்சி நிறைந்த ஞான ஆட்சிக்காலமாக
   ஐயமற அரங்கன் ஆசியால் அரங்கேறும்
   அரங்கனின் தொண்டர்கள் மூலமாக இந்த மாற்றம் நிகழும்

6. நிகழவே ஞானவான்கள் அத்துனைபேரும் நிலவுலகில் ஓங்காரக்குடில் நோக்கி வந்து

ஆக்கமுடன் அரங்கனை குருவாக ஏற்று அடிபணிந்து அறத்தின் வழி சேவை

சேவை செய்து நாளும் தொடரத்தொடர

சிறப்பான மாற்றம் உலகம் காணக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–